## “Cargills Cash” வாடிக்கையாளரிடமிருந்து பொதுவாக எழுகின்ற வினாக்கள்

## பொதுவாக எழுகின்ற வினாக்கள்

**1. Cargills Cash வசதி என்பது யாது?**

- ➢ வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய கணக்கு அடிப்படையிலான மொபைல் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட் ஆனது கார்கில்ஸ் ஃபூட் சிட்டியுடன் மூலோபாயக் கூட்டிணைப்பொன்றை ஸ்தாபித்துள்ளது.
- ➢ இவ்வசதியானது நாடெங்கிலுமுள்ள கார்கில்ஸ் ஃபூட் சிட்டி விற்பனை மையங்களை உபயோகித்து, கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு இடமளிக்கின்றது.
- ➢ மொபைல் வங்கிச்சேவை அடிப்படையின் கீழ் இலங்கையின் வங்கித்துறையில் இந்த புத்தாக்கமான வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், நாட்டிலே இது வரை எட்டப்படாத சந்தைகளை எட்டும் வர்த்தக முயற்சிக்கு வங்கிக்கு இடமளிக்கின்றது.
- ➢ ஏற்றுக்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள்:
- வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல்
- வாடிக்கையாளர்கள் பணத்தை மீளப் பெறுவதற்கு இடமளித்தல்
- வாடிக்கையாளர்கள் ஃபூட் சிட்டியில் பொருட்களைக் கொள்வனவு செய்த பின்னர், கார்கில்ஸ் வங்கி கணக்கின் மூலமாக அதற்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு இடமளித்தல்
- உள்நாட்டினுள் பணம் அனுப்பும் வசதி (“Send Cash” வசதி)

**2. Cargills Cash சேவையை உபயோகித்து நான் மேற்கொள்ளக்கூடிய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் எவை என்பதை விளக்க முடியுமா?**

பண வைப்புக்கள் - கார்கில்ஸ் ஃபூட் சிட்டியில் கிடைக்கப்பெறுகின்ற வைப்புப் படிவத்தை பூரணப்படுத்தி எந்தவொரு வங்கிக் கணக்கிற்கும்

மிக இலகுவாக நீங்கள் பணத்தை வைப்பிலிட முடியும்.

**1. மொபைல் இலக்கத்தை அல்லது கணக்கு இலக்கத்தை உபயோகித்தல்**

எனினும் கார்கில்ஸ் வங்கி மொபைல் பயன்பாட்டுடன் இணைக்கப்பட்டுள்ள பிரதான கணக்கிற்கு மாத்திரமே மொபைல் இலக்கத்தை உபயோகித்து பணத்தை வைப்புச் செய்ய முடியும். இதற்கு நீங்கள் கார்கில்ஸ் வங்கி மொபைல் பயன்பாட்டிற்கான பதிவினை மேற்கொண்டிருத்தல் வேண்டும். கார்கில்ஸ் வங்கி மொபைல் வங்கிச்சேவை வசதி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு தயசு செய்து (https://www.cargillsbank.com/products/mobile-banking/) இனைப் பார்க்கவும்.

**2. மொபைல் பயன்பாட்டை (Mobile App) கொண்டிராத வாடிக்கையாளர்கள் பண வைப்பை மேற்கொள்வதற்கு கணக்கு இலக்கத்தினை பயன்படுத்தல் வேண்டும்.**

2. பணத்தை மீளப்பெறல் - உங்களுடைய கார்கில்ஸ் வங்கி மொபைல் பயன்பாட்டுடன் இணைக்கப்பட்டுள்ள உங்களது பிரதான கணக்கிலிருந்து நீங்கள் பணத்தை மீளப்பெற முடியும். கார்கில்ஸ் ஃபூட் சிட்டி விற்பனை மையங்களில் பணத்தை மீளப்பெறுவதற்கு கார்கில்ஸ் வங்கி மொபைல் பயன்பாட்டிற்கான பதிவினை மேற்கொண்டிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

கார்கில்ஸ் ஃபூட் சிட்டியிலுள்ள காசாளர் உரிய தரவு விபரங்களை பதிவு செய்து கொண்ட பின்னர், உங்களுடைய மொபைல் வங்கிச்சேவை பயன்பாட்டினுள் உள்நுழைந்து உங்களுடைய மொபைல் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் கடவுச்சொல்லை (ஒரு தடவைக்கான கடவுச்சொல்) பதிவு செய்து, கொடுக்கல்வாங்கலை அங்கீகரித்தல் வேண்டும்.

3. பொருட்கள் கொள்வனவு - உங்களது கார்கில்ஸ் ஃபூட் சிட்டி பட்டியல்களுக்கு கடனட்டை அல்லது டெபிட் அட்டையை உபயோகிப்பதற்குப் பதிலாக Cargills Cash மொபைல் வங்கிச்சேவை பயன்பாட்டின் மூலமாக கொடுப்பனவைச் செலுத்த முடியும். கார்கில்ஸ்

ஃபூட் சிட்டி விற்பனை மையங்களில் “கொள்வனவுகளை” மேற்கொள்வதற்கு கார்கில்ஸ் வங்கி மொபைல் பயன்பாட்டிற்கான பதிவினை மேற்கொண்டிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

உங்களுடைய Cargills Cash மொபைல் வங்கிச்சேவைப் பயன்பாட்டை உபயோகித்து கார்கில்ஸ் ஃபூட் சிட்டி பட்டியல் கொடுப்பனவுகளைச் செலுத்தும் போது மொபைல் இலக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிரதான கணக்கிலேயே அது கழிக்கப்படும்/பற்றுச் செய்யப்படும்.

4. “பணம் அனுப்புதல்” - செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை மற்றும் மொபைல் இலக்கம் ஆகியவற்றைக் கொண்டுள்ள எந்தவொரு இலங்கைப் பிரஜைக்கும் இவ்வசதியை உபயோகித்து பணத்தை அனுப்ப முடியும்.

நீங்கள் Cargills Cash மொபைல் வங்கிச்சேவை பயன்பாட்டினுள் நுழைந்து “பயனாளியின்” விபரங்களை பதிவு செய்து, தோற்றுவிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) பயனாளியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பெற்றுக்கொள்பவர்/பயனாளி எந்தவொரு கார்கில்ஸ் ஃபூட் சிட்டி விற்பனை மையத்திலும் தேசிய அடையாள அட்டையையும், தனக்கு கிடைக்கப்பெற்ற தனிப்பட்ட அடையாள இலக்கத்தையும் சமர்ப்பித்து, கார்கில்ஸ் ஃபூட் சிட்டி பணியாளர்களால் சரிபார்க்கப்பட்ட பின்னர் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பெற்றுக்கொள்பவர்/பயனாளி தனக்கு அனுப்பப்பட்ட பணத்தை 3 தினங்களுக்குள் பெற்றுக்கொள்ள முடியும். 3 தினங்களுக்குள் பணம் சேகரிக்கப்படாவிட்டால் அனுப்பியவரின்/வரைந்தவரின் கணக்கிற்கு அது திருப்பி அனுப்பப்படும்.

**3. “Cargills Cash” வசதிக்காக பதிவு செய்து கொள்ள எவருக்கு முடியும்?**

தொழிற்பாட்டிலுள்ள சேமிப்பு அல்லது தனிநபர் நடைமுறைக் கணக்குகளைக் கொண்டுள்ள எந்தவொரு கார்கில்ஸ் வங்கி வாடிக்கையாளரும் Cargills Cash வசதிக்காக தம்மைப் பதிவு செய்து கொள்ள

முடியும்.

தற்போது பின்வரும் கார்கில்ஸ் வங்கி மொபைல் பயன்பாட்டில் ஒன்றை பதிவிறக்கம் செய்து கார்கில்ஸ் வங்கி கணக்கு வாடிக்கையாளர்கள் “Cargills Cash” இற்காக தம்மைப் பதிவு செய்து கொள்ள முடியும்.

அல்லது

**4. Cargills Cash கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கு அதிக பட்ச கொடுக்கல்வாங்கல் எல்லை மற்றும் கட்டணங்கள் ஏதேனும் உள்ளனவா?**

*தற்போதைய கொடுக்கல்வாங்கல் அதிக பட்ச எல்லைகள்*

| **கொடுக்கல்வாங்கல் வகை** | **கொடுக்கல்வாங்கல் எல்லை** | **அன்றாட எல்லை** |
|---|---|---|
| வைப்பு | 100,000 | 500,000 |
| மீளப்பெறல் | 50,000 | 100,000 |
| கொள்வனவுகள் | 50,000 | 100,000 |
| பண மீளப்பெறுதல்களை அனுப்புதல் | 50,000 | 100,000 |

**5. Cargills Cash மொபைல் வங்கிச்சேவை பயன்பாட்டை அடையப்பெறுவதற்கு இணைய வங்கிச்சேவை பயனர் அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல்லை நான் உபயோகிக்க முடியுமா?**

ஆம், இது கார்கில்ஸ் வங்கியின் “டிஜிட்டல் வங்கிச்சேவை” வசதியின்

தனித்துவமான ஒரு அம்சமாகும். நீங்கள் தோற்றுவிக்கும் “டிஜிட்டல் வங்கிச்சேவை” பயனர் அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல் ஆகியன இணைய வங்கிச்சேவை, Cargills Cash மொபைல் வங்கிச்சேவை பயன்பாடு போன்ற எந்தவொரு டிஜிட்டல்/இணைய வழிமுறைகளுக்கும் உள்நுழைவதற்கு பயன்படுத்த முடியும்.

**6. கணக்குகளை தொழிற்படுத்துவதற்கு உபயோகிக்கக்கூடிய மொபைல் சாதனங்களின் வகைகளில் எவ்விதமான கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன?**

Android மற்றும் iOS செயற்பாடு கொண்ட மொபைல் தொலைபேசி சாதனங்களுடன் கார்கில்ஸ் வங்கி டிஜிட்டல் வங்கிச்சேவை தொழிற்பாட்டு இசைவாக்கம் கொண்டுள்ளது.

Andriod – Ice Cream sandwich வடிவத்திற்கு மேல் (4.0 மற்றும் அதற்கு மேற்பட்ட வடிவங்கள்)

iOS – 7.0 மற்றும் அதற்கு மேற்பட்ட வடிவங்கள்

செய்தி அனுப்பும் ஆற்றல்கள் மற்றும் குறும் குறியீடு ஆகியவற்றிற்கு இடமளிக்கும் அனைத்து மொபைல் சாதனங்களும் USSD வங்கிச்சேவைக்கான இசைவாக்கம் கொண்டவை. (பதிவுசெய்யப்பட்டுள்ள ஸ்மார்ட் போன் பாவனையாளர்களுக்கு USSD வங்கிச்சேவை முற்கூட்டியே செயல் வடிவ இசைவாக்கப்பட்டுள்ளது.

**7. Cargills Cash மொபைல் வங்கிச்சேவை மூலமாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை நான் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்?**

நீங்கள் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையை மேற்கொள்ளும் ஒவ்வொரு தடவையும், நடவடிக்கையின் விபரங்களை உறுதிப்படுத்தும் வகையில் உங்களுடைய மொபைல் சாதனத்தில் முகத்திரை காண்பிக்கப்படும்.

உங்களுடைய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள நீங்கள் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை தொடர்பான தகவல் விபரங்களைக் கண்டறியவும், உங்களுடைய கணக்கு மீதிகளை சரிபார்த்துக் கொள்ளவும் முடியும்.

மேலும், எஸ்எம்எஸ் செய்திக்காக நீங்கள் பதிவினை மேற்கொண்டிருந்தால், ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையின் போதும் எஸ்எம்எஸ் உறுதிப்படுத்தல் விபரங்களை நீங்கள் பெற்றுக்கொள்வரீகள்.

### 10. **எனது மொபைல் சாதனத்தை தவறவிடும் சந்தர்ப்பத்தில் நான் செய்ய வேண்டியது என்ன**?

+94 7 640 640 மூலமாக வங்கியின் அழைப்பு மையத்தை உடனடியாக அழைக்கவும்.

அழைப்பு மைய முகவர் உங்களது விபரங்களை சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் உங்களது கணக்கின் செயற்பாட்டை முடக்குவார். உங்களுடைய மொபைல் சேவை வழங்குனரிடம் நீங்கள் இதற்கான மாற்று ஏற்பாடுகளை பூர்த்தி செய்த பின்னர் நீங்கள் கடவுச்சொல்லை மீளமைத்துக் கொள்ள முடியும்.

குறிப்பு: மொபைல் வங்கிச்சேவை பயன்பாட்டின் செயற்பாடு முடக்கப்படும் போது கார்கில்ஸ் வங்கி இணைய வங்கிச்சேவை நுழைமுகத்தையும் நீங்கள் உபயோகிக்க முடியாது.

### 11. **கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையை மேற்கொள்ளும் போது தொடர்பாடல்/வலையமைப்பில் துண்டிப்பு ஏற்பட்டால் என்ன நேரும்**?

உங்களுடைய மொபைல் சாதனத்தின் மூலமாக நீங்கள் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை ஒன்றைப் பூர்த்தி செய்த பின்னர், அக்கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் நீங்கள் எஸ்எம்எஸ்

ஒன்றைப் பெற்றுக்கொள்வரீகள்.

துண்டிக்கப்பட்ட அழைப்பு அல்லது வலையமைப்பு காரணமாக இச்செய்தியை நீங்கள் பெற்றுக்கொள்ளாத பட்சத்தில், உங்களது கணக்கினை சரிபார்த்து நடைமுறைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையை மீளவும் சமர்ப்பிக்கவும்.

### 12. **நான் புதிய தொலைபேசி ஒன்றைப் பெற்றுக்கொண்டால் என்ன செய்ய வேண்டும்?**

புதிய தொலைபேசியைப் பெற்றிருப்பினும், அதே மொபைல் இலக்கத்தையும், மொபைல் சேவை வலையமைப்பாளரையும் தொடர்ந்தும் உபயோகிக்கும் பட்சத்தில் எவ்விதமான மாற்றங்களும் தேவைப்படாது.

உங்களுடைய புதிய ஸ்மார்ட்போனில் கார்கில்ஸ் மொபைல் வங்கிச்சேவை பயன்பாட்டினை நீங்கள் பதிவிறக்கம் செய்து நீங்கள் தற்போது உபயோகிக்கின்ற விபரங்களை உபயோகித்து உள்நுழைய முடியும்.

நீங்கள் வேறு சேவை வலையமைப்பாளருக்கும் மற்றும்/அல்லது தொலைபேசி இலக்கத்திற்கு மாற்றம் செய்து கொண்டால், அந்த மாற்றம் தொடர்பில் நீங்கள் எழுத்து மூலமாக வங்கிக்கு அறிவித்து, உங்களுடைய விபரங்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய மொபைல் இலக்கம் தவறானதெனில் உங்களுடைய மொபைல் வங்கிச்சேவை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கான ஒரு தடவை கடவுச்சொல் செய்திகளை நீங்கள் பெற்றுக்கொள்ள மாட்டீர்கள்.

### 13. **கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையொன்றினை எவ்வாறு தேடல் செய்ய முடியும்?**

முன்னைய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையின் விபரங்களை உங்களுடைய மொபைல் சாதனத்தின் மூலமாக நீங்கள் கண்டறிய முடியும்.

**14. எனது பயனர் பெயர்/கடவுச்சொல் நினைவில் இல்லாத போது என்ன செய்ய வேண்டும்?**

+94 7 640 640 மூலமாக கார்கில்ஸ் வங்கி அழைப்பு மையத்திற்கு நீங்கள் அழைப்பினை ஏற்படுத்தி, புதிய கடவுச்சொல்லுக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.